# கணக்கீடு

## 8.1 இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

## தேர்ச்சி 8.0

# இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

**தேர்ச்சி மட்டம் 8.1**

இலாப நோக்கமற்ற அமைப்புக்களில் கணக்கு வைப்பதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துதல்

### இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்

இலாபத்தை முதன்மை நோக்கமாகக் கொள்ளாது சேவையை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்படும் அமைப்புக்கள் இலாப நோக்கமற்ற அமைப்புக்கள் ஆகும். இவ்வமைப்புக்களானவை அங்கத்தவர்களின் நலன்களையும் சமூக முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொள்ளும் அமைப்புக்களாக காணப்படுகின்றன.

### பாடசாலையில் காணப்படும் இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்




### பிரதேசத்தில் காணப்படும் இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்




தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் கணக்கு வைத்தலின் முக்கியத்துவம்

இலாப நோக்கமற்ற அமைப்புக்களானவை இலாப நோக்கத்தை நோக்காகக் கொண்டு செயற்படாவிடினும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டுவதற்காக பொருளாதார நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டுவதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

இதற்காக அதன் உறுப்பினர்களிடமிருந்து அங்கத்துவக் கட்டணத்தைப் பெறுகின்றன. இவ்வாறு பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அதில் அக்கறை கொண்ட அங்கத்தவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் தகவல் வழங்க வேண்டிய தேவைப்பாடு எழுகின்றது. இதனால் இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் கணக்கு வைத்தலானது முக்கியத்துவமாகின்றது.

## இலாப நோக்கமற்ற அமைப்பொன்றில் பேணப்படும் கணக்குகள்

இலாப நோக்கமற்ற அமைப்பொன்றில் பல நோக்கப்பாட்டிற்காக பின்வரும் ஏடுகளானவை தயாரிக்கப்படுகின்றன.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமானச் செலவுக் கணக்கு
3. நிதிநிலைமைக் கூற்று
4. அங்கத்தவர் சந்தாக் கணக்கு
5. மேலதிக வருமானம் பெறும் வகையில் ஈடுபடும் போது அதன் பெறுபேறுகளை அறிவதற்காக தயாரிக்கப்படும் வருமானக் கூற்று.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

இலாப நோக்கமற்ற அமைப்புக்களானவை குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதிக்கான காசுப் பெறுவனவுகளையும், காசுக் கொடுப்பனவுகளையும் அறிந்து கொள்வதற்காக தயாரித்துக் கொள்ளப்படுபவை கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஆகும். கொள்ளல் கொடுத்தல் கணக்கினை காசுக் கணக்கு எனவும் அழைப்பர்.

கொள்ளல் கொடுத்தல் கணக்கானது காசு மீதியினை அறிந்து கொள்வதற்காக தயார் செய்து கொள்ளப்படுகின்றது. இக்கணக்கானது காசு அடிப்படையில் தயார் செய்து கொள்ளப்படுகின்றது.
இக் கணக்கின் இறுதி விளைவு நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும்.

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வருமானச் செலவினக் கணக்கு / கூற்று**

குறிப்பிட்ட இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதிக்கான வருமானங்கள் செலவினங்கள் ஒப்பு நோக்கப்பட்டு அமைப்பின் மேலதிகம் அல்லது குறைவு என்பவற்றை அறிவதற்காக தயார் செய்யப்படுவது வருமானச் செலவுக் கணக்காகும். வருமானச் செலவுக் கணக்கினை வருமானக் கூற்று எனவும் அழைப்பார்.
இக்கணக்கானது அமைப்பின் மேலதிகம் அல்லது குறைவு என்பதனை அறிவதற்காக தயார் செய்யப்படுகின்றது.
இக்கணக்கானது அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படுகின்றது. இக்கணக்கின் இறுதி விளைவு திரள் நிதியுடன் செம்மையாக்கப்படும்.

**திரண்ட நிதி**

இலாப நோக்கமற்ற அமைப்புக்கள் வருடாந்தம் ஈட்டப்படும் மேலதிகங்களின் கூட்டுத்தொகை திரண்டநிதி ஆகும்.
திரண்டநிதியானது அமைப்பின் மொத்தச் சொத்திலிருந்து மொத்தப் பொறுப்பைக் கழிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.
அமைப்பின் மேலதிகம் திரள்நிதியை அதிகரிக்கும்
அமைப்பின் குறைவு திரள்நிதியைக் குறைக்கும்

**நிதி நிலைமைக் கூற்று**

குறிப்பிடப்பட்ட இலாப நோக்கமற்ற அமைப்பானது குறிப்பிட்ட நிதியாண்டின் இறுதியில் தமது அமைப்பில் காணப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்களின் திரள்நிதி என்பவற்றின் பெறுமதியை அறிந்து கொள்வதற்காக தயார் செய்து கொள்ளப்படுவது நிதிநிலைமைக் கூற்று ஆகும்.

**அங்கத்தவர் சந்தாக் கணக்கு**

குறிப்பிட்ட அமைப்பின் குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதிக்கான பிரதான வருமான ஊடகத்தின் அங்கத்தவர் சந்தாப் பெறுமதியை அறிந்து கொள்வதற்காக தயார் செய்து கொள்ளப்படும் ஓர் கணக்கு அங்கத்தவர் சந்தாக் கணக்காகும்.

**பிற வருமானங்களை ஈட்டுவதற்கான புறச் செயற்பாடுகள்**

இலாப நோக்கமற்ற அமைப்புக்கள் தமது அமைப்புக்கான மேல-திக வருமானத்தை ஈட்டுவதற்காக ஈடுபட்டுக் கொள்பவை புறச் செயற்பாடுகள் ஆகும்.

உதாரணம்: கலை விழாக்கள் நடாத்துதல்
விளையாட்டுப்போட்டி நடாத்துதல்

இச் செயற்பாட்டினால் எழும் பெறுபேறை வேறுபடுத்தி அறிந்து கொள்ள வருமானக் கூற்று தயாரிக்கப்படும்

தொகுப்பு : திரு.சி.தவராஜா, ஆசிரியர்- கணக்கீடு (யாழ்/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk